

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், விருப்பாட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபத்தில், அவர்களின் 223ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, அன்னாரது திருவுருவச்சிலைக்கு அமைச்சர் அர.சக்கரபாணி நேற்று (05.09.2024) மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நாகராஜபூபதி, கோபால்நாயக்கர் சேவா சங்கம் தலைவர் செந்தில்குமார், செயலாளர் பெருமாள்சாமி, விருப்பாட்சி ஊராட்சி மன்ற தலைவர் மாலதி வெண்ணிலா உட்பட பலர் உள்ளனர்.



செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் 153வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (5.9.2024) சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள வ.உ.சி அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

223 வது நினைவு தினத்தை முன்னிட்டு விருப்பாட்சியில்

# விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## அமைச்சர் அர.சக்கரபாணி மரியாதை செலுத்தினார்!

திண்டுக்கல், செப். 6 - திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், விருப்பாட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபத்தில், அவர்களின் 223ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, அன்னாரது திருவுருவச்சிலைக்கு அமைச்சர் சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி தலைமையில் நேற்று (05.09.2024) மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சக்கரபாணி தெரிவித்ததாவது:

இந்திய திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தலைவர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஆகியோரின் தியாகங்களைப் போற்றிப் பாராட்டி, பெருமை படுத்துகின்ற வகையில், அரசின் சார்பில் அந்த தியாக சீலர்களுக்கு நகரின் முக்கிய பகுதிகளில் சிலைகளும், அவர்களின் நினைவினைப் போற்றுகின்ற வகையில் பிறந்த இடம், வாழ்ந்து மறைந்த வீடுகளை நினைவு இல்லங்களாகவும், நினைவு மண்டபங்களும், நினைவுத் தூண்களும் அரசின் சார்பில் அமைக்கப்பட்டு உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், அப்பெருமக்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாட்களானது, அரசு விழாவாக தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரைப் பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்த நாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது.

விடுதலைப் போராட்டத் தியாகிகள், தமிழ்ச் சான்றோர்கள் மற்றும் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு, போராட்டத்தில் பங்கேற்ற நிகழ்வுகளை நினைவுகூரும் வகையிலும், வருங்கால இளையதலைமுறையினர் அதை அறிந்து கொள்ளும் வகையிலும், நினைவு மண்டபங்களில் படங்கள், வரலாற்று தகவல்கள் பொதுமக்கள் பார்வையிடும் வகையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள், நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தலைவர்கள் மற்றும் வீரர்களின் திருவுருவச் சிலைகளுக்கு சுதந்திரதினம், குடியரசு தினம், தலைவர்களின் பிறந்த தினம் மற்றும் நினைவு தினங்களில் தலைவர்களின் திருவுருவச் சிலைகள் மற்றும் படங்களுக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்திட ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, விடுதலைக்காக அரும்பாடுபட்ட தலைவர்கள் மற்றும் வீரர்களின் திருவுருவச் சிலைகள், படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், விருப்பாட்சியை 40 ஆண்டுகள் ஆட்சி செய்து வெள்ளை ஏகாதிபத்தியத்தால் தூக்கிலிடப்பட்ட, தமிழ்நாட்டின் மிகப் பெரிய விடுதலைப் போராட்ட வீரர் குப்பளப் பாட்சா என்று திப்புசுல்தானாலும், கோபால் நாயக்கர் என்று மக்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டவர் திருமலை குப்பளசின்னப்ப நாயக்கர். விருப்பாட்சியைச் சுற்றிலும் தன்னுடைய உறவினர்களைக் கொண்டு பல ஊர்களை உருவாக்கி ஆண்டு வந்தார்.

சிவகங்கை ராணி வேலு நாச்சியார், பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை ஆகியோருடன் இணைந்து வெள்ளையருக்கு வரி கட்டாமல் போராடினார். வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து திண்டுக்கல் பகுதியில் போரிட்டவர் விருப்பாட்சி கோபால் நாயக்கர். இவர் சிவகங்கை ராணி வேலுநாச்சியார், பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை ஆகியோருக்குத் தேவையான பாதுகாப்பையும், படை பலத்தையும் வழங்கியவர்.

திண்டுக்கல் சீமை பாளையக்காரர்களை ஒன்றிணைத்து வலுவான கூட்டணியை கோபால்நாயக்கர் உருவாக்கி, புலித்தேவன், தீரன்சின்னமலை, வீரன் அழகுமுத்துக்கோன், வீரபாண்டிய கட்டப்பொம்மன் போன்ற பாளையக்காரர்களுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு வரி கட்ட மறுத்து போர் புரிந்தார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கி லிடப்பட்ட பின்னர், பாஞ்சாலங்குறிச்சி சிறைக்குள்ளே பூட்டி வைக்கப்பட்டிருந்த அவருடைய தம்பி ஊமைத்துரையை, சிறைக்குள்ளே புகுந்து அதிரடிப்போர் நடத்தி, ஊமைத்துரையை மீட்டு, விருப்பாட்சிக்கு அழைத்து வந்து, 6000 படைவீரர்களை அவருக்கு அளித்து ஊமைத்துரையை பாஞ்சாலங்குறிச்சிக்கே மன்னராக்கியவர் கோபால் நாயக்கர்.

கும்பினிப்படையினரை எதிர்த்து நடைபெற்ற கொரில்லா தாக்குதலுக்கு கோபால்நாயக்கர்தான் காரணம் என்று கருதி அவரை 04.05.1801 அன்று வெள்ளையர்கள் கைது செய்து திண்டுக்கல் சிறையில் அடைத்து சித்ரவதை செய்தனர். பின்னர் திண்டுக்கல் கோபாலசமுத்திரம் குளம் அருகே புளியமரத்தில் 05.09.1801 அன்று கோபால்நாயக்கர் தூக்கிலிடப்பட்டார். சாகும் போது கூட கொஞ்சமும் கலங்காமல் தன் மரணத்தைப் புன்னகையுடன் ஏற்றுக்கொண்ட மாவீரன் கோபால்நாயக்கர் ஆவார்.

நாட்டின் விடுதலைக்காக கடந்த 05.09.1801ஆம் ஆண்டு உயிர் தியாகம் செய்த கோபால் நாயக்கர் அவர்களின் நினைவு தினம் (செப்டம்பர் 5ஆம் தேதி) அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, விருப்பாட்சியில், விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் அவர்களின் நினைவு தினமான நேற்று(செப்டம்பர் 5) அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்திய திருநாட்டின் நலனுக்காக பாடுபட்ட தலைவர்கள் வழியில், நாமும் செயல்பட்டு, நாட்டின் நலனை காப்பாற்ற இந்நாளில் உறுதி எடுத்துக் கொள்வோம், என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் பல்வேறு மாவட்ட பகுதிகளிலிருந்தும் ஏராளமான பொதுமக்கள், விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் அவர்களின் மணிமண்டபத்திற்கு வருகைபுரிந்து, அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில், பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நாகராஜபூபதி, கோபால்நாயக்கர் சேவா சங்கம் தலைவர் செந்தில்குமார், செயலாளர் பெருமாள்சாமி, வாடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் தஜோதீஸ்வரன், விருப்பாட்சி ஊராட்சி மன்ற தலைவர் மாலதி வெண்ணிலா மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

திருத்துறைப்பூண்டி ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகி

# எம்.கார்த்தி தாயார் மாலதி மறைவு!

## பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், செப். 6 - திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஒன்றிய இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் கார்த்தி என்று அழைக்கப்படும் எம்.கார்த்திகேயனின் தாயார் மாலதி அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

திருத்துறைப்பூண்டி ஒன்றிய இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் கார்த்தி என்று அழைக்கப்படும் கார்த்திகேயனின் தாயார் மாலதி அவர்கள் உடல் நலக்குறைவால் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மறைந்த மாலதிக்கு கொத்தமங்கலம் தி.மு.க. கிளைக்கழக செயலாளராக உள்ள மாரிமுத்து என்கிற கணவரும், கார்த்திகேயன், மைக்கேல்ராஜ் ஆகிய மகன்களும் உள்ளனர். இதில் கார்த்தி எனும் கார்த்திகேயன் திருத்துறைப்பூண்டி ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணியின் துணை அமைப்பாளராக உள்ளார்.

மறைவின் தகவல் அறிந்த மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா ,ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாண்டியன், ப.ஆடலரசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பணகுடி ஏ.எஸ்.குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கடேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் தங்கள் இரங்கலை தெரிவித்தனர். அம்மையாரின் இறுதி ஊர்வலம் அவரது சொந்த ஊரான கொத்தமங்கலத்தில் 04.09.2024. அன்று நடைபெற்றது.




திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகர தி.மு.க சார்பில் நேற்று காலை 10.00 மணியளவில் திருப்பத்தூர் SRK கன்வென்சன் ஹாலில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தி, புதிய உறுப்பினர்கள் அட்டை மற்றும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர், தென்திசையின் தீர்ப்பு 40/40 நூல்களை வழங்கினார். திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்து, கூட்டத்திற்கு தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர். ஜோதிராஜன், பொதுக்குழு உறுப்பினர் சு.அரசு, டி.ரகுநாத், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் செ.வெங்கடேசன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சார்லஸ் நவீன்குமார், திருப்பத்தூர் நகர மன்ற தலைவர் சங்கீதாவெங்கடேசன், மற்றும் நகர கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன்

# 5 தலைமுறைகள் கண்ட மாபெரும் ஒரே இயக்கம் தி.மு.க.!

## சின்னாளப்பட்டியில் மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் பேச்சு!



திண்டுக்கல், செப். 6 - கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் 5 தலைமுறைகள் கண்ட ஒரே மாபெரும் இயக்கம் திமுக என்ற பேரியக்கம் என்று சின்னாளபட்டியில் நடைபெற்ற கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினருமான ஐ.பி. செந்தில்குமார் பேசினார். 2024ல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் 40 க்கு 40 வெற்றி பெற்றதுபோல் 2026 சட்ட மன்ற தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெற்று கழகத் தலைவர் கையில் வெற்றிக்கனியை திமுகவினர் கொடுக்க வேண்டும் என்று ஐ.பி.செந்தில்குமார் வேண்டுகோள் விடுத்தார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் வரும் 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்நோக்கும் வண்ணம் கழக பொதுஉறுப்பினர் கூட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆத்தூர் கிழக்கு ஒன்றியம், ஆத்தூர் மேற்கு ஒன்றியம், சின்னாளபட்டி சித்தையன் கோட்டை, அய்யம்பாளையம் பேரூர் கழக திமுக சார்பாக கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் சின்னாளபட்டி பேருந்துநிலையம் அருகே உள்ள விஜய மஹாலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினருமான ஐ.பி. செந்தில்குமார் தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், எம்.மார்கிரேட்மேரி, மு.பிலால்உசேன், மாவட்டப் பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஆத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி சி. ராமன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் எம்.பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், துணை தலைவர் ஹேமலதா மணிகண்டன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் வரவேற்று பேசினார். கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் பேசியதாவது:

கொட்டும்மழையில் பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட தி.மு.க. என்ற இயக்கம் ஆலமரம் போல் தழைத்து இன்று விண்ணுயர்ந்து நிற்கிறது. அதற்கு காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞரில் தொடங்கி திராவிட மாடல் எழுச்சி நாயகர் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் வருங்கால தமிழகம் உதயநிதி ஸ்டாலின் அவர்களே காரணம். அடிமட்ட தொண்டனுக்கும் பாதுகாப்பாக இருப்பது திமுக என்ற பேரியக்கம் தான் அதனால்தான் இந்த இயக்கம் (திமுக) ஐந்து தலைமுறைகளை கண்டுள்ளது.

2024ம் வருடம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாம் எப்படி 40க்கு40 தொகுதிகளில் வெற்றிக்கனியை பறித்து நமது கழகத்தலைவர் கையில் கொடுத்தோமோ அதுபோல வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளில் மாபெரும் வெற்றிபெற்று வெற்றிக்கனியை அவர் கையில் வழங்க வேண்டும். இதுவே ஒவ்வொரு திமுக தொண்டனின் உறுதி மொழி என கருதி வரும் சட்டமன்ற தொகுதிக்கான பணியை இன்றே தொடங்க வேண்டும். நம்முடன் இணைந்து பணியாற்ற கழகத்தில் மகளிரணியினர் தயாராகி வருகின்றனர். கழகத்தின் ஒவ்வொரு வெற்றியிலும் துணையாக நிற்கும் மகளிரணியினர் இம்முறை விஸ்வரூபம் எடுத்ததுபோல் கிராமங்கள் தோறும் மகளிரணியினர் கழகத்தில் இணைந்து வருகின்றனர். இது நமது வெற்றிக்கு பக்கபலமாக இருக்கும் என்றார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிறைவு மற்றும் 101வது ஆண்டு தொடக்கத்தில் கிளைக்கழகம் தோறும் புதிய கொடி கம்பங்களை ஊன்றி கழக கொடியை ஏற்றவேண்டும். அதுதான் தமிழினத்திற்காக உயிருள்ளவரை போராடிய கழகத் தலைவர்களுக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனாகும். ஆத்தூர் தொகுதி மக்களின் செல்ல பிள்ளையாகவும், ஒவ்வொரு திமுக தொண்டனின் பாதுகாவலராக இருக்கும் கழக துணை பொதுச்செயலாளர் ஐ.பி. ஒவ்வொரு நிமிடமும் கழக தொண்டனுக்கு என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணம் தான் இருக்கும். அதனால் தான் தொடர்ந்து 33 வருடங்களாக ஆத்தூர் தொகுதியில் வலம்வந்து மக்களோடு மக்களாக தொண்டர்களோடு தொண்டர்களாக இருந்து கழக பணி ஆற்றிவருவதால் தான் ஆத்தூர் தொகுதியின் தி.மு.க. எக்கு கோட்டையாக உள்ளது.

இந்தக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றாலும் அவர் எண்ணம் முழுவதும் திமுக என்ற பேரியக்கத்தின் வளர்ச்சியை நோக்கித் தான் இருக்கும் என்றார். இன்றே நாம் சபதம் எடுப்போம். வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் கழகத்தலைவர் கையில் 200 தொகுதிகளின் வெற்றிக் கனியை கொடுப்போம் என உறுதிமொழி எடுப்போம் என ஐ.பி. செந்தில்குமார் பேசினார்.


நிகழ்ச்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர் சிவக்குமார், திமுக துணை செயலாளர்கள் எம்.சி.;பாண்டி யன், வசந்த கென்னடி, பொருளாளர் தொப்பம்பட்டி கருப்பையா, மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் காணிக்கைசாமி, பொருளாளர் தேவரப்பன்பட்டி போஸ், துணை செயலாளர்கள் மல்லையாபுரம் சக்திவேல், கருத்தராஜா, கலா பச்சை, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் பத்மாவதி ராஜகணேஷ், சின்னாளப் பட்டி பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணை தலைவர் ஆனந்தி பாரதி ராஜா, பேரூராட்சி மன்றத் தலைவர்கள் அய்யம்பாளையம் ரேகாஐய்யப்பன், சித்தையன் கோட்டை போதும்பொண்ணுமுரளி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வீரக்கல் காங்கேயன்,

மேற்கு ஒன்றிய ஒன்றியக்குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன். அழகு சரவணன், சாதிக், சிந்தாமணி நாகசுந்தரம், பாப்பாத்தி, வக்கம்பட்டி காணிக்கைராஜ், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய ஒன்றியக் குழு உறுப்பினர்கள் நாகவள்ளி, முத்துமாரிசேகர், பேரூர் கழக செயலாளர்கள் சித்தையன்கோட்டை சக்திவேல், அய்யம்பாளையம் தங்கராஜ், பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் ஜாஹிர்உசேன், ஆர்.ஜீவானந்தம், மற்றும் சின்னாளப்பட்டி பேரூர் கழக முன்னாள் செயலாளர்கள் எஸ்.கே.துரை, பாலகிருஷ்ணன், அறிவழகன், பேரூர் கழக பொருளாளர் எஸ். ஆர்.முருகன், மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய பேருர்கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கிளைக்கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பிஎல்ஏ2) வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பிஎல்சி) மற்றும் கழக பொது உறுப்பினர் பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக சின்னாளப்பட்டி பேரூர்கழக செயலாளர் மோகன்ராஜ் நன்றி கூறினார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## புலவர் க.முருகையன்
## செப்டம்பர் 6 (1997)



இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கையில் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழகத்தில் பணியாற்றி, பின்னர் கழகம் துவங்கியதும் தன்னை இணைந்துக்கொண்டு, ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே கழகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களுடன் கல்லக்குடி போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

1967இல் திருவையாறு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, திறம்பட பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**